விஜயபாரதம்
மின்னணு தின இதழ் (தனிச்சுற்று) VIJAYABHARATHAM DAILY
பிலவ, ஆனி - 11 வெள்ளி 25.06.2021 மலர் - 2, இதழ் - 80

# சேவைத்துளிகள்

விஜயபாரதம்



சேவா இண்டர்நேஷனல் சார்பாக ரூபாய் 5.5 லட்சம் மதிப்புள்ள வெண்டிலேட்டர் கருவி சென்னை விருகம்பாக்கத்தில் உள்ள ஆதித்யா காமராஜா மருத்துவமனைக்கு சேவாபாரதி தமிழ்நாடு மூலம் நன்கொடையாக வழங்கப்பட்டது.

# இலவச உணவு தானிய திட்டம்



விஜயபாரதம்

நாட்டில் கொரோனா இரண்டாவது அலை பரவல் அதிகரித்த நிலையில், பிரதமரின் ஏழைகள் நல உணவு திட்டத்தின் கீழ் மே, ஜூன் மாதங்களில் ரேஷன் கடைகளில் நபர் ஒன்றுக்கு 5 கிலோ உணவு தானியம் இலவசமாக வழங்கப்படும் என மத்திய அரசு அறிவித்தது. பின்னர், இம்மாத துவக்கத்தில், பிரதமர் ஏழைகள் நல உணவு திட்டத்தின் கீழ் தீபாவளிவரை ரேஷன் கடைகளில் இலவச உணவு தானியங்கள் வழங்கப்படும் என பிரதமர் மோடி அறிவித்தார். இதற்கு மத்திய அமைச்சரவை கூட்டத்தில் ஒப்புதல் அளிக்கப்பட்டது. அதன்படி, வரும் நவம்பர் வரை நீட்டிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ், ஒரு நபருக்கு மாதம் 5 கிலோ உணவு தானியங்கள் இலவசமாக வழங்கப்படும். இதனால், 81 கோடியே 35 லட்சம் பேர் பலனடைவர். இதன் மொத்த செலவையும் மத்திய அரசே ஏற்றுக் கொள்கிறது. இதனால், அரசுக்கு 67 ஆயிரத்து 266 கோடி ரூபாய் செலவு ஏற்படும்.

# நாடு கடத்தப்படுகிறார் நிரவ் மோடி



விஜயபாரதம்

இந்தியாவில் வங்கிக்கடன் மோசடி வழக்கில் வைர வியாபாரி நிரவ் மோடியின் மீதான விசாரணை தீவிரமடைந்ததால், அவர் கடந்த 2018ல் லண்டனுக்கு தப்பிச் சென்றார். சி.பி.ஐயின் வேண்டுகோளின்படி, அங்கு கைது செய்யப்பட்ட நிரவ் மோடி வாண்ட்ஸ்வொர்த் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். நிரவ் மோடியை இந்தியாவுக்கு நாடு கடத்தக் கோரி இந்தியா வெஸ்ட்மின்ஸ்டர் மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தது. நீதிமன்றம், நிரவ் மோடியை இந்தியாவுக்கு நாடு கடத்த பிப்ரவரி மாதம் உத்தரவிட்டது. இந்த நாடு கடத்தும் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்ய அனுமதி கோரி பிரிட்டன் உயர் நீதிமன்றத்தில் நிரவ் மோடி மனு தாக்கல் செய்திருந்தார். ஆனால், அவரது மனுவை ஏற்க நீதிமன்றம் மறுத்துவிட்டது. இதனால் நிரவ் மோடியை நாடு கடத்தும் பணியை அதிகாரிகள் விரைவில் தொடங்குவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

# திறக்கப்படுமா அம்மா மினி கிளினிக் ?

சட்டசபையில் நடந்த விவாதத்தில் பங்கேற்று பேசிய, எதிர்க்கட்சி தலைவர் பழனிசாமி, 'அ.தி.மு.க., ஆட்சியில், 2,000 இடங்களில் அம்மா மினி கிளினிக் துவங்கப்பட்டது. மருத்துவ பணியாளர் தேர்வாணையம் வாயிலாக, 35 ஆயிரம் பேர் தேர்வு செய்யப்பட்டனர். அவற்றில் பணிபுரிந்த மருத்துவர்கள், கொரோனா தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். தற்போது தொற்று பரவல் குறைந்துள்ளதால், அம்மா மினி கிளினிக்குகளை மீண்டும் திறக்க வேண்டும்' என தமிழக அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளார்.




விஜயபாரதம்

# சொந்த அமைப்பினர் மீதே குண்டு வீச்சு




விஜயபாரதம்

பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா (பி.எஃப்.ஐ) அமைப்பு, அது நிறுவப் பட்ட நாளிலிருந்தே, எப்போதும் மோசமான செய்கைகளுக்காக மட்டுமே செய்திகளில் வந்துள்ளது. அவற்றில் ஒன்று, சமீபத்தியவை கேரளாவின் பாதாம் வனப்பகுதியில் 200க்கும் அதிகமானோருக்கு ஆயுத பயிற்சி அளித்தது. இது தொடர்பாக புலனாய்வு அமைப்புகள் விசாரித்து வரும் வேளையில், அதே பாதாம் வனப்பகுதிக்கு அருகே தற்போது மற்றொரு சம்பவம் நடந்துள்ளது. பி.எஃப்.ஐ எஸ்.டி.பி.ஐ கும்பல்களுக்கு இடையே உள்ள சில நிதி பரிவர்த்தனைகள் தொடர்பான தகராறுகளால், பைசல் ராஜ் தலைமையிலான கும்பல், சுல்பிகர், நைசாம் அகியோர் மீது வெடிகுண்டுகளை வீசியது. இந்த சம்பவத்தைத் தொடர்ந்து பயங்கரவாத தடுப்புப் படையினர் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணையில் ஈடுபட்டனர்.

# என்.ஐ. ஏ. விசாரிக்கும் நக்சல் வழக்கு

சத்திஷ்கர் மாநிலம், சுக்மா பிஜாப்பூர் எல்லைக்கு அருகிலுள்ள ஜொங்குடா கிராமத்தில், கடந்த 2021 ஏப்ரல் 3ம் தேதி பாதுகாப்புப் படையினர் மீது நக்சலைட்டுகள் பயங்கர தாக்குதல் நடத்தினர். அதில் 22 சி.ஆர்.பி.எப் பாதுகாப்புப்படை வீரர்கள் வீரமரணம் அடைந்தனர். அவ்வழக்கு தற்போது தேசிய புலனாய்வு முகமை (என்.ஐ.ஏ) அமைப்பிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இவ்வழக்கில் நக்சல் தலைவர் நம்பலா கேசவராவ் எனப்படும் வசவராஜ் முக்கிய குற்றவாளியாக சேர்க்கப்பட்டுள்ளார். மேலும், மாதவி ஹிட்மா உட்பட 18 நக்சலைட்டுகள் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. மற்றொரு எஃப்.ஐ.ஆரில், 350 முதல் 400 அடையாளம் தெரியாத நக்சலைட்டுகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

விஜயபாரதம்








# கண்ணை மறைத்த மதப்பற்று

கர்நாடகாவின் விஜயபுரா மாவட்டத்தில் உள்ள சலதஹள்ளி கிராமத்தில் ஆட்டோரிக்ஷா ஓட்டுநரான 19 வயது பட்டியலின ஹிந்து இளைஞரான பசவராஜ் மடிவலபா பாடிகர், தாவல்பி பந்தகிசாப் தம்பாத் என்ற முஸ்லிம் பெண்ணை காதலித்து வந்தார். இதனை பிடிக்காத அந்த பெண்ணின் குடும்பத்தினர் அவர்கள் இருவரையும் அந்த இளைஞரின் தாயின் கண் முன்பாகவே கயிற்றால் கட்டி குத்திக் கொலை செய்தனர். இது ஒரு கௌரவக் கொலை என காவல்துறையினர் கூறுகின்றனர். மேலும் தலைமறைவாக உள்ள அந்தப் பெண்ணின் தந்தை, சகோதரர், இரண்டு உறவினர்களையும் காவல்துறையினர் தேடிவருகின்றனர்.



விஜயபாரதம்

# எஸ்.டி.பி.ஐ. குற்றவாளி கைது

கேரள மாநிலம் அலப்புழா, வயலாரில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பை சேர்ந்த நந்து கிருஷ்ணா என்ற ஸ்வயம்சேவகரை கடந்த 2021 பிப்ரவரி 24 அன்று பாப்புலர் பிரண்ட் ஆப் இந்தியா என்ற பயங்கரவாத ஆதரவு அமைப்பின் அரசியல் முகமான எஸ்.டி.பி.ஐ கட்சியை சேர்ந்தவர்கள் கொலை செய்தனர். இதில் தலைமறைவாக இருந்த முக்கிய குற்றவாளியான நிஹாஸ் என்பவன் கைது செய்யப்பட்டான். இவ்வழக்குத் தொடர்பாக இதுவரை 25 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்




விஜயபாரதம்

# செந்தில் பாலாஜிக்கு சிக்கல்

தற்போதைய தி.மு.க அரசில், மின்சாரத் துறை அமைச்சரான செந்தில் பாலாஜி, கடந்த 2011 2016 காலகட்டத்தில், அ.தி.மு.க அரசில் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்தார். அப்போது, போக்குவரத்துத் துறையில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, 81 நபர்களிடம் ரூ. 1.62 கோடி மோசடி செய்ததாக செந்தில் பாலாஜி உட்பட நான்குபேர் மீது சென்னை மத்திய குற்றப்பிரிவு காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டது. இவ்வழக்கு, எம்.பி. எம்.எல்.ஏ.க்களுக்கான சிறப்பு நீதிமன்றத்தில் நடந்து வருகிறது. இதற்கிடையே மோசடி தொடர்பாக மேலும் இரு வழக்குகளை, அமைச்சர் செந்தில் பாலாஜி உட்பட 47 பேர் மீது, சென்னை சிறப்பு நீதிமன்றத்தில், மத்தியக் குற்றப் பிரிவு போலீஸார் வழக்குத் தொடர்ந்துள்ளனர். இவ்வழக்கில், குற்றப் பத்திரிகை வழங்குவது தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராக செந்தில் பாலாஜிக்கு சம்மன் அனுப்பப்பட்டிருந்தது. தற்போது சட்டப்பேரவை நடைபெற்று வருவதால், ஆஜராவதிலிருந்து விலக்கு அளிக்கக் கோரி செந்தில் பாலாஜி மனு தாக்கல் செய்திருந்தார். இம்மனுவை ஏற்ற நீதிபதி. ஜூலை 15 தேதி ஆஜராக மீண்டும் சம்மன் அனுப்ப உத்தரவிட்டார்.



விஜயபாரதம்

# தெரசா அறக்கட்டளை இயக்குனர் கைது

அன்னை தெரசா நல அறக்கட்டளையின் அனாதை இல்லத்தில் குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் செய்ததற்காக அனாதை இல்லத்தின் இயக்குனர் ஹர்பால் சிங் தாப்பர், அவர் மனைவி புஷ்பா ராணி, அவரது மகன் மற்றும் வார்டன் கைது செய்யப்பட்டனர். புஷ்பா ராணி, டிர்கி கிழக்கு சிங்பூம் மாவட்ட குழந்தைகள் நலக் குழுவின் (சி.டபிள்யூ.சி) தலைவராகவும் இருந்தார். இரண்டு மைனர் சிறுமிகள் காணாமல் போனது சம்பந்தமான புகாரை காவல்துறை விசாரித்தபோது இந்த கொடூரமான விவரங்கள் வெளிச்சத்துக்கு வந்தன.




விஜயபாரதம்

# உள்நாட்டு பொம்மைகளுக்கு முக்கியத்துவம்

டாய்கதோன் - 2021 மாநாட்டில் பங்கேற்றவர்களுடன், வீடியோ கான்பரன்சிங் முறையில் பேசிய பிரதமர் மோடி, 'பாரதத்தில் பயன்படுத்தப்படும் பொம்மைகளில் 80 சதவீதம் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுபவை. இதனால், கோடிக்கணக்கான நம் நாட்டுப் பணம் வெளிநாடுகளுக்கு செல்கிறது. இந்த சூழலை மாற்ற வேண்டும். உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொம்மைகளுக்கு மக்கள் ஆதரவு அளிக்க வேண்டும். சர்வதேச பொம்மை சந்தை மதிப்பு 100 பில்லியன் டாலர்கள். அதில், நம் பாரதத்தின் பங்களிப்பு 1.5 பில்லியன் டாலர் மட்டுமே. குழந்தைகளின் முதல் பள்ளி குடும்பம்தான். அவர்களது முதல் புத்தகம், முதல் நண்பன் எல்லாம் பொம்மைகள்தான்' என கூறினார்.



விஜயபாரதம்

# கூகுளுக்கு எதிராக விசாரணை

பாரதத்தில், வர்த்தகப் போட்டி நடைமுறைகளுக்கு எதிராக 'ஸ்மார்ட் டிவி' ஆப்பரேட்டிங் சிஸ்டத்தை கூகுள் சந்தைப்படுத்துகிறது என்று எழுந்த புகார் தொடர்பாக விரிவான விசாரணை நடத்த இந்திய தொழில் போட்டி ஆணையம் (சி.சி.ஐ) உத்தரவிட்டுள்ளது. தொலைக்காட்சி செயலி வினியோக ஒப்பந்தத்தின்படி, கூகுளின் அனைத்து அப்ளிகேஷன்களையும் நிறுவ வேண்டும் என ஸ்மார்ட் டி.வி உற்பத்தியாளர்களை நிர்பந்திக்கிறது கூகுள். மேலும், பிளே ஸ்டோரிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. இதுபோன்ற கூகுளின் செயல்பாடுகள் இந்திய போட்டி நடைமுறைச் சட்டத்திற்கு எதிரானது என அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது. ஆனால், நடைமுறை சட்டங்களுக்கு உட்பட்டே நாங்கள் நடக்கிறோம் என கூகுள் நிறுவனம் தெரிவித்துள்ளது.

விஜயபாரதம்






# சீனாவின் பத்திரிகை சுதந்திரம் இதுதான்

ஹாங்காங்கை சேர்ந்த ஜனநாயக செய்தித்தாளான 'ஆப்பிள் டெய்லி' நேற்றுடன் மூடப்பட்டது. அந்த பத்திரிகையின் உரிமையாளர், ஆசிரியர், நிர்வாகிகள் என பெரும்பாலானோரை சீனா கைது செய்து சிறையில் அடைத்துள்ளது. அப்பத்திரிகையின் சொத்துக்களை முடக்கிவிட்டது. இதனால் வேறு வழியின்றி பத்திரிகை மூடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.



விஜயபாரதம்

# வாரன் பஃபெட் ராஜினாமா

வாரன் பஃபெட் பில்கேட்ஸ், அவரது முன்னாள் மனைவி மெலிண்டா கேட்ஸ் இணைந்து உருவாக்கியது கேட்ஸ் அறக்கட்டளை. இது உலகின் மிகப்பெரிய தொண்டு நிறுவனங்களில் ஒன்று. இந்த அறக்கட்டளையின் அறங்காவலர் பதவியை இதுவரை வகித்துவந்தவர் மிகப்பெரிய முதலீட்டாளரான வாரன் பஃபெட். அவர் தற்போது அந்த பதவியை ராஜினாமா செய்துள்ளார். அந்த பதவிக்கு, பி.எம்.ஜியின் தலைமை நிர்வாக அதிகாரி மார்க் சுஸ்மான் சிறந்த தேர்வாக இருப்பார் என கூறியுள்ளார். மேலும், அவர், தனது சொத்தில் இருந்து 4.1 பில்லியன் டாலர்கள் நன்கொடையாக வழங்குவதாகவும் கூறினார். பில் கேட்ஸ், மெலிண்டா கேட்ஸ் விவாகரத்து செய்வதாக அறிவித்த சில வாரங்களுக்குப் பிறகு இந்த அறிவிப்பு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.



விஜயபாரதம்

# சீன தடுப்பூசிகள் நிராகரிப்பு

கொரோனவுக்கு எதிரான சீன தடுப்பூசிகளான சினோவாக்கை செலுத்திக்கொண்ட பிறகும் தன் நாட்டு மக்களை மீண்டும் கொரோனா தாக்குகிறது என உணர்ந்த இந்தோனேஷியா, கோஸ்டாரிகா உள்ளிட்ட நாடுகள், சீன தடுப்பூசிகளை கொள்முதல் செய்வதை தற்காலிகமாக நிறுத்திவைத்துள்ளன. மீண்டும் அந்த தடுப்பூசிகளின் செயல் திறனை பரிசோதித்தப் பிறகே கொள்முதல் குறித்து ஆராயப்படும் என தெரிவித்துள்ளன. முன்னதாக, சினோவேக் தடுப்பூசிகளை தன் நாட்டு மக்களுக்கு செலுத்திய ஐக்கிய அரபு எமிரேட்ஸ், பஹ்ரைன் நாடுகள், அவர்களுக்கு மீண்டும் ஃபைசர், பயோஎன்டெக் தடுப்பூசிகளை செலுத்தின. சீன விஞ்ஞானி ஜார்ஜ் காவ், சீன தடுப்பூசிகளின் செயல்திறன் குறித்து கவலை தெரிவித்திருந்தார். பின்னர் சீன அரசின் அச்சுறுத்தல் காரணமாக தன் கருத்து தவறாக புரிந்துகொள்ளப்பட்டது என மாற்றிக்கூறினார். உலக சுகாதார மையத்தின் அவசரகால பயன்பாட்டு அங்கீகாரத்தைப் பெறுவதற்குக் குறைந்தபட்சத் தேவை 50 சதவீதம் என்பதால், சினோவாக் செயல்திறன் 51 சதவீதம் என்று சீனா அறிவித்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

விஜயபாரதம்



# தினமும் கட்டாய மதமாற்றம்

ஐ.நா மனித உரிமைகள் கவுன்சில் கூட்டம் ஸ்விட்சர்லாந்து தலைநகர் ஜெனிவாவில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் இந்தியாவின் சார்பாக இந்திய தூதரக குழுவின் செயலர் பவன்பதே உரையாற்றினார். அப்போது "பாகிஸ்தானில் தினமும் மதமாற்றம் நடைபெற்று வருகிறது. ஹிந்துக்கள், சீக்கியர்கள், கிறிஸ்தவர்கள் உள்ளிட்ட சிறுபான்மையின சிறுமிகளை கடத்தி பாலியல் கொடுமை செய்து அவர்களை கட்டாய மதமாற்றம் செய்து திருமணம் செய்து வருகின்றனர். இந்த கொடுமைகள் அனைத்தும் பாகிஸ்தான் அரசின் துணையோடு நடைபெற்று வருகிறது. அதேபோல, சிறுபான்மையினரின் கோயில்கள், வழிபாட்டுத் தலங்கள் சூறையாடப்பட்டு வருகின்றன. பாகிஸ்தானில் தடை செய்யப்பட்ட பயங்கரவாத இயக்கத்திற்கு ஆதரவு தரப்படுகிறது. அவர்கள் அங்கு வெளிப்படையாக செயல்பட அரசே அனுமதி அளிக்கின்றது. ஐ.நா.,வால் சர்வதேச பயங்கரவாதியாக அறிவிக்கப்பட்டவர்களுக்கு பாகிஸ்தான் அடைக்கலம் அளித்து வருகிறது. அவர்களுக்கு தொடர்ந்து ஓய்வூதியமும் வழங்குகிறது. இதற்கு, பாகிஸ்தான் அரசுதான் பொறுப்பேற்கச் செய்ய வேண்டும்" என்று கூறினார்.


விஜயபாரதம்




# சிக்கலில் சீனா

சீனாவின் சின்ஜியாங் மாகாணத்தில் 10 லட்சத்துக்கும் அதிகமான உய்குர் முஸ்லிம்கள், சட்டத்துக்குப் புறம்பாக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர். பலர் கொல்லப்பட்டுள்ளனர், பலர் கொத்தடிமைகளாக வேலை செய்ய நிர்பந்திக்கப்படுகின்றனர், பெண்கள் மீதன பாலியல் துஷ்பிரயோகம், கட்டாயக் கருத்தடை, மசூதிகளை இடித்து அங்கு கழிப்பறைகள் கட்டப்படுகின்றன. இதுகுறித்து ஆய்வு செய்ய சீனாவின் சின்ஜியாங் மாகாணத்துக்குச் செல்ல உடனடியாக அனுமதி அளிக்க வேண்டும் என ஐ.நா சபையின் மனித உரிமை மன்றத்தில், நாற்பதுக்கும் அதிகமான நாடுகள் கோரிக்கை விடுத்து உள்ளன. ஏற்கனவே கொரோனாவை பரப்பியது, எல்லைகளில் அத்து மீறல் உள்ளிட்ட விவகாரங்களில் சிக்கியுள்ள சீனாவிற்கு இது மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

விஜயபாரதம்



# அஜித் தோவல் வலியுறுத்தல்

ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டில் (எஸ்.சி.ஓ) கலந்துகொண்டு பேசிய பாரதத்தின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல், பாகிஸ்தானை தளமாகக் கொண்ட பயங்கரவாத அமைப்புகளான லஷ்கர்இதைபா மற்றும் ஜெய்ஷ்இமுகமது உள்ளிட்ட அமைப்புகளுக்கு எதிராக கடுமையான செயல் திட்டத்தை கொண்டு வருமாறு எஸ்.சி.ஓவை வலியுறுத்தினார். மேலும், பாரிஸில் விரைவில் எப்.ஏ.டி.எப் கூட்டம் நடைபெற உள்ளது. அதில் பாகிஸ்தானை சாம்பல் பட்டியலில் வைத்திருப்பதா அல்லது கருப்புப் பட்டியலில் வைத்து தடை செய்வதான என முடிவெடுக்கப்படும். பாகிஸ்தான், பயங்கரவாதிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை வழங்க வேண்டும். ஐ.நா. தீர்மானங்களை முழுமையாக அமல்படுத்த வேண்டியது அவசியம். ஆப்கானிஸ்தானில் சமீப காலமாக தாலிபான்களின் தாக்குதல் அதிகரித்துள்ளது. அங்கு, மக்களின் நலனுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டியது அவசியம். 2017ல்தான் இந்தியா எஸ்.சி.ஓ உறுப்பினராக இணைந்தது. ஆனாலும், நாங்கள் இந்த நாடுகளுடன் பல நூற்றாண்டுகளாக ஆன்மீகம், கலாச்சாரம், தத்துவங்களால் இணைந்துள்ளோம். என தெரிவித்த அஜித் தோவல், பயங்கரவாதிகள் தற்போது பயன்படுத்தும் ட்ரோன்கள், ஆயுதக் கடத்தல், டார்க் வெப், செயற்கை நுண்ணறிவு, பிளாக்செயின், சமூக ஊடக துஷ்பிரயோகம் போன்ற நவீன தொழில்நுட்பத்தை கண்காணிக்க வேண்டும் என்று எஸ்.சி.ஓ உறுப்பினர்களிடம் கோரிக்கை வைத்தார்.



விஜயபாரதம்

# ஜியோ - கூகுள் மலிவு விலை ஸ்மார்ட்போன்

ரிலையன்ஸ் நிறுவனத்தின் வருடாந்திர பொதுக்குழு கூட்டம் நேற்று வீடியோ கான்பரன்ஸ் மூலம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் ரிலையன்ஸ் குழும தலைவர் முகேஷ் அம்பானி, கூகுள் ரிலையன்ஸ் ஜியோ இணைந்து உருவாக்கியுள்ள ஜியோபோன் நெக்ஸ்ட் ஸ்மார்ட்போனை அறிமுகம் செய்தார். இந்த ஜியோபோன் நெக்ஸ்ட் ஸ்மார்ட்போன், வரும் விநாயகர் சதுர்த்தி தினமான செப்டம்பர் 10ம் தேதி விற்பனைக்கு வர உள்ளது. மேலும், 'இந்தியாவின் மலிவு விலை 4ஜி ஸ்மார்ட்போனாக இது இருக்கும். நாட்டில் முழுமையான 5ஜி தொழில்நுட்பத்தை வழங்கும் பணிகளில் ஈடுபட்டுள்ளோம். இதற்காக கூகுள் க்ளவுட் தொழில்நுட்பத்துடன் கூடிய 5ஜி சேவையை வழங்க முடிவு செய்துள்ளோம். உலகளாவிய கூட்டாளர்களுடன் இணைந்து 5ஜி சாதனங்களை உருவாக்குகிறோம்' என முகேஷ் அம்பானி கூறினார். அவரைத்தொடர்ந்து பேசிய கூகுள் சி.இ.ஓ., சுந்தர் பிச்சை, 4ஜி ஸ்மார்ட்போன் மட்டுமின்றி கூகுள் ரிலையன்ஸ் ஜியோ கூட்டணியில் 5ஜி ஸ்மார்ட்போன் ஒன்று உருவாக்கப்பட்டு வருகிறது. விரைவில் அது வெளியாகும்.' எனக் கூறினார்.




விஜயபாரதம்

# மோடி காஷ்மீர் தலைவர்கள் கூட்டம்

ஜம்மு காஷ்மீர் மாநிலத்தில் சட்டசபை தேர்தல் நடத்துவது, மாநில அந்தஸ்து வழங்குவது குறித்து பிரதமர் மோடி, காஷ்மீர் மாநில அரசியல் கட்சிகளுக்கு அழைப்பு விடுத்திருந்தார். அதனை ஏற்று காஷ்மீர் மாநிலத்தின் பல்வேறு அரசியல் கட்சிதலைவர்கள் தலைநகர் புதுடில்லியில் நேற்று பிரதமர் மோடியை சந்தித்தனர். மூன்றரை மணி நேரம் நடைபெற்ற அக்கூட்டத்தில், காஷ்மீருக்கு முழு மாநில அந்தஸ்தை வழஙகுவது, மாநிலத்தில் சட்டசபை தேர்தல் நடத்துவது, காஷ்மீர் பண்டிட் இனத்தவர்ளை மீண்டும் குடியமர்த்துவது, அரசியல் கட்சிதலைவர்களை விடுவிப்பு உள்ளிட்ட சில முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்பட்டன. இக்கூட்டத்தில் பங்கேற்றவர்கர்கள், கூட்டம் அமைதியான முறையில் நடந்தது. நம்பிக்கைதருவதாக அமைந்தது என தெரிவித்தனர்.

விஜயபாரதம்




விஜயபாரதம் தேசிய வார இதழ்

சந்தா செலுத்த / புதுப்பிக்க
www.vijayabharatham.org
என்ற இணையதளம் அல்லது
044 - 26420870 என்ற தொலைபேசி
எண்ணில் தொடர்பு கொள்ளவும் .

93613 99006

# உண்மையின் உருவம்


விஜயபாரதம்

அது ஒரு சிற்றூர். அங்கு ஒரு சாது வந்தார். அவர் பொய் உரைக்காத ஓர் உத்தமர் வீட்டிலே உணவருந்துவேன் என்றார். அதற்கு அனைவரும் ராமன் வீட்டை காட்டினர். அவர் ஒரு லட்சாதிபதி, அவருக்கு நான்கு ஆண் மகன்களும் உள்ளனர் என ஊரார் கூறினர்.

சாது அவரின் குணம் பற்றி பரிச்சோதிக்க சில கேள்விகள் கேட்டார். அது உனக்கு எத்தனைக் குழந்தைகள்? எவ்வளவு செல்வம் உள்ளது? உன் வயது என்ன? சாதுவின் கேள்விக்கு ராமன், எனக்கு மூன்றரை வயதாகிறது, 22 ஆயிரம் பணமும், ஒரு புதல்வனும் உள்ளான் என்றார்.

சாது ஊரார் உரைப்பதும், நீங்கள் உரைப்பதும் வேறாக உள்ளதே, நீ உண்மை உரைக்கும் உத்தமனா? என்றார். அதற்கு ராமன் கையிருப்பு பெட்டியில் 1.25 ஆயிரம் உள்ளது. ஆனால் நான் தர்மத்திற்கு செலவு செய்து 22 ஆயிரம் மட்டுமே! அதுவே, என் பணம் என்றார். தாய், தந்தையர் மனம் அறிந்து செயல்படுபவன் ஒருவனே. அதனால் எனக்கு ஒரு புதல்வன்.

நான் இறைவனை வழிபடுவது ஒவ்வொரு நாளும் ஒன்றரை மணி நேரம்தான். மிகுதி நேரம் எல்லாம் வயிற்றுகாகவும், குடும்பத்திற்காகவும் உழைக்கிறேன். இறை சிந்தனை இல்லாத நேரம் எல்லாம் நான் பிறவா நேரமே! அப்படி பார்க்க பிறந்து 60 ஆண்டுகளில் 5 வயதில் இருந்துப் பூசிக்கிறேன். அந்த வகையில் எனக்கு வயது 3 வருடம், 5 மாதம், 7 நாள், பதினாறரை மணி நேரமே ஆகிறது, என்றார்.

தர்மம் செய்த பணம்தான் ஒருவனுக்கு சொந்தம். தாய், தந்தை கருத்தை அனுசரிக்கின்றவனே மகன். இறைவனுக்கு அளித்த நேரமே ஒருவனின் நேரம் என ராமன் கூறவே வியந்து போனார் சாது.

திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள்

# வலையில் சிக்கிய மீம்கள் . . .




கருணாநிதிக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க தி.மு.க இனிகோ இருதயராஜ் கோரிக்கை!!!

பாரத ரத்னாவேதான் வேணுமா? ஏன், 'ஒன்றிய ரத்னா' விருது, இல்லைன்னா, பெரியாருக்கு கொடுத்த மாதிரி 'யுனெஸ்கோ விருது' எல்லாம் வேணாமா!?




கரண்ட்டுக்கு ~ அணில்

சர்க்கரைக்கு ~ எறும்பு

கூவத்துக்கு ~ முதலை

சாக்குக்கு ~ கரையான்

சென்னையில் குடி தண்ணீர் பஞ்சம்
ஏற்பட்டுச்சுன்னா என்ன சொல்லனும்...... ?

செம்பரம்பாக்க ஏரியில் உள்ள மீன்கள்
எல்லாம் தண்ணீரை குடிச்சி காலி
பன்னிடிச்சி
அப்படின்னு மீன்கள் மேல பழிய போடனும்
சரியா...🤣😀😀

